Date.**<u>09.12.2024</u>**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)**

**விழுப்புரம்.**

OS.03/2015

**பி.வா.சா.1**

**<u>பெயர்-</u>** திரு.பாபு

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என் அண்ணன் 1ம் பிரதிவாதி சங்கர் விவசாய வேலை செய்து வருகிறார். அவருக்கு ஒரு கால் ஊனம் என்று சொன்னால் சரிதான். அவரால் ஒரு காலில் நடக்க முடியாது என்றால் சரிதான். என் தாயார் தனியாக வசித்து வருகிறார். அவர் எந்த ஊரில் இருக்கிறார் என்றால் கீழ்புதுப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறார். எனக்கும் என் தாயாருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல உள்ளது. பாகபத்திரம் தயார் செய்தது அதற்கான வாசகங்கள் சொன்னது ஏற்பாடு செய்தது அனைத்தும் நான் தான் என்றால் சரிதான். எல்லா சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்களும் என் வசம் உள்ளது என்றால் சரிதான். பாகபத்திரத்தில் உள்ள வாசகங்கள் சரிதான். என் அம்மாவிற்கு எழுத படிக்க தெரியாது. என் அம்மாவிற்கு நான் சொத்து கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். 18 செண்ட் நிலம் கொடுத்துள்ளேன். அதை என் அம்மாவே பயிர் செய்து வருகிறார். நான் பயிர் செய்யவில்லை. பாகபிரிவினையில் என் பங்கிற்கு 2. 1/4 ஏக்கர் பாகம் ஒதுக்கப்பட்டது. என்

அண்ணனுக்கு அவருக்கும் 2. 1/4 ஏக்கர் பாகம் ஒதுக்கப்பட்டது. எங்கள் மூன்று சகோதரிகளுக்கும் ஒவ்வொருவருக்கும் 33 செண்ட் நிலம் ஒதுக்கினோம். என் பாகபத்திரத்தில் சொத்துக்களுக்கான மதிப்பு போட்டுள்ளோம். மதிப்பை பார்த்தை எழுதியது யார் என்றால் நாங்கள் தான் எழுதினோம். பெண்களுக்கு சம உரிமை அளிக்கும் சட்டம் வருவதற்கு முன்பே என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெண்களுக்கு சம உரிமை அளிக்கும் சட்டம் வருவதற்கு முன்பே என் தகப்பனார் இறந்துவிட்டதால் நானும், என் சகோதர்களும் சேர்ந்து என் சகோதரிகளுக்கு சமமான பாகம் கொடுக்க மாட்டோம் என்று சொன்னோமா என்றால் இல்லை. நாங்கள் சகோதரிகளுக்கு சமபாகம் கொடுக்க தயாராக இருந்தோமா என்றால் அவர்கள் சமபாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். பத்திரம் எழுதுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே சொத்துக்களின் மதிப்பை பார்த்துவிட்டோம். மாதிரி பத்திரம் கையில் எழுதி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. மாதிரி தயார் செய்த நகல் எங்கே என்றால் அது கணினி நகல் தான். நான் பாகபத்திரத்தின் நகல் ஆவணத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஏன் அசல் ஆவணத்தை போடவில்லை என்றால் அவர்கள் முதலிலேயே கொடுத்துவிட்டார்கள். நான் மொத்தம் 1 அசல் மற்றும் 4 நகல் வாங்கினேன். பத்திர நகல்களுக்கு பணம் செலுத்தியதற்கான ரசீது 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்டது. 5 நகல்களையும் அவர் தான் பெற்றுக்கொண்டார்கள் என்றால் இல்லை 2 தான் வாங்கினோம். பாகபத்திரத்தில் தினகரன் சாட்சி கையெழுத்து போட்டார். அவர் எங்களின் எதிர் நிலத்துக்காரர். மற்றொரு சாட்சி பச்சையப்பன் அவர் எனது நண்பர் ஆவார். பத்திரம் எழுதிய அன்றே பதிவு செய்யப்பட்டது. பதிவு மாலை தான் செய்தார்களா என்றால் இல்லை 1 மணியளவில் பதிவு செய்தார்கள். பதிவு செய்த

போது பந்த் என்றால் இல்லை. அப்போது பந்த் எதுவும் இல்லை. அன்று எந்த நடமாட்டமும் இல்லை என்றும், எந்த வண்டியும் ஓடவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரிகளுக்கு சமபாகம் கிடையாது என்று நான் பதில் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்திலும் என் சகோதரிகளுக்கு சமபாகம் கிடையாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது சகோதரிகள் தங்களுக்கு குறைந்த பாகம் கொடுத்தாலே போதும் என ஒப்புக்கொண்டதாக கூறிய விவரத்தை எனது பதில் வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல அந்த விவரத்தை சொல்லியுள்ளேன். எங்கள் குடும்பத்தில் மொத்தம் 3 வீடு உள்ளது. அதில் 2 சுனாமி வீடு. அதில் ஆளுக்கு ஒரு வீட்டில் நாங்கள் ஆண் பிள்ளைகள் குடியிருக்கிறோம். என் அம்மாவும் அங்கு இருக்கிறார். என் பெயரிலும், என் பிள்ளைகள் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் என் அம்மா கோட்டகுப்பம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் என் அண்ணன் பெயரில் மட்டும் தான் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ-17 புகாரை என் அம்மா என் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவரது குடும்ப அட்டை, கேஸ் அட்டை, ஆகியவற்றை நாங்கள் எடுத்துக்கொண்டதாக புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். நான் காவல் நிலையத்திலேயே ஆவணங்களை திருப்பி கொடுத்துவிட்டேன். என் பத்திரங்கள் அனைத்தும் அம்மா வசம் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு வரும்போது இதையும் சேர்த்து எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். பத்திரங்களை நான் திருப்பி கொடுக்க தயாராக இருந்தேன். அவர்கள் தான் வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். ஆவணங்களை எல்லாம் எடுத்துசென்று ஒரு வாரத்தில் அவர்கள் புகார் கொடுத்தார்கள். சொத்துக்களை பிரிக்கிறேன் என்று

சொல்லி ஏமாற்றிவிட்டதாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் கொடுக்கவில்லை. நாங்கள் இருவரும் சேர்ந்து ஆவணங்களை எடுத்துக்கொண்டது மட்டும் அல்லாமல் அவர்களை துன்புறுத்தினோம் என்று என் அம்மா காவல் நிலையத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். வேண்டும் என்றே கொடுத்துள்ளார். எங்களது 3 சகோதரிகளின் கணவர்கள் யாரும் பாக பிரிவினை ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் வரவே இல்லை. அவர்கள் 3 பேரையும் நான் சாட்சி போடுமாறு நான் கேட்டேனா என்றால் இல்லை. எதற்கு பத்திர அலுவலகத்தில் இரு நகல்கள் வாங்கினேன் என்றால் எனக்கும் என் அண்ணனுக்கும் மட்டும் வாங்கிக்கொண்டோம். பாக பத்திரம் எழுதிய பிறகு எனக்கும், வாதிகளுக்கும் பேச்சு வார்த்தை உண்டா என்றால் உண்டு. நானோ என் அண்ணனோ வாதிகளுக்கு நகல்கள் எதுவும் கொடுக்கவில்லை. நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் நகல் கொடுத்துள்ளதாக நான் சொல்லியுள்ளேன். வாங்குவதற்கு முன்பு அனைத்து சொத்துக்களையும் நானும், என் அண்ணனும் தான் அனுபவித்து வந்தோம். பாகம் பிரிந்த பிறகும் அந்த சொத்துக்களை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை. எங்கள் சொத்தை மட்டும் நாங்கள் அனுபவித்து வருகிறோம். வாதிகள் எங்களிடம் சொத்துக்களை ஒப்புக்கொள்ளவும் இல்லை. அனுபவிக்கவும் இல்லை. அது கரம்பாக உள்ளது. நானும், என் அண்ணனும், பாகபத்திரத்தில் எனது சகோதரிகளை ஏமாற்றி நானும், எனது அண்ணனும் கூடுதலாக சொத்தை எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் பந்த் அன்று அவசரஅவசரமாக ஒரு பத்திரத்தை தயார் செய்து வாதிகளை படிக்கவிடாமல் கையெழுத்து பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதிகளின் கணவர்கள்

யாரும் வரவில்லை என்றும், அவர்கள் வராதவாறு நான் பார்த்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. பத்திரத்திற்கு மாதிரி எடுத்து அவர்கள் படித்து பார்த்து தெரிந்துக்கொண்டதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்ததை அனுகூலமாக கொண்டு அவர்களை ஏமாற்றி நான் ஆவணங்களை எழுதிவாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட சட்டத்தின் படி பெண்களுக்கு சமபங்கு கொடுத்தாலும் அதை ஏற்க மனம் இல்லாமல் நான் ஏமாற்றுகிறேன் என்றால் சரியல்ல. சொத்துக்கள் எனது அப்பா சொத்துக்கள் அல்ல. 43 செண்ட் அன் அப்பாவிற்கு பூர்வீகமாக கிடைத்தது. மீதமுள்ள நிலங்களை நானும், என் அண்ணனும் சம்பாதித்ததாக கூறுகிறேன். நானும், என் அண்ணனும், ஒரு உண்ணாமலை என்பவரின் 1.1/2 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து சம்பாதித்தோம். நான் 12 வகுப்பு வரை படித்துள்ளேன். என் அண்ணன் பட்டப்படிப்பு படித்துள்ளார். எல்லா சொத்துக்களும் என் அப்பா உயிருடன் இருக்கும் போது வாங்கப்பட்டது என்றால் சரிதான். பாக பத்திரத்திலும் இந்த சொத்துக்கள் அனைத்தையும் என் அப்பா வாங்கியதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொத்துக்கள் வாங்கும்போது எங்கள் இருவருக்கும் 10 வயது குறைவு என்றும், நாங்கள் உழைத்து சொத்துக்கள் வாங்கியதாக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. சரிசமமாக பிரிக்கப்படாத இந்த பாகம் செல்லாது என்றால் சரியல்ல.